EASTERN UNIVERSITY SRI LANKA

PER ARDUA AD SCIENTIAM

# இளந்தளிர்

# 2010



மாணவர் ஒன்றியம்

கலை, கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

# சிவில் சமூகம்

-திரு. த. கிருஸ்ணமோகன்-

முதுநிலை விரிவுரையாளர் - அரசியல் - சமூக விஞ்ஞானத் துறை

சிவில் சமூகம் என்ற பதம் மிகப்பழமையானதாக இருப்பினும், தற்காலத்தில் இருப்பதற்கு புதிய விளக்கங்களும் வியாக்கியானங்களும் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகள் வரை இருந்து வந்த அதிகாரத்துவ அரசியல் முறைமையின் வீழ்ச்சியின் பின்னர் சிவில் சமூகம் பற்றிய புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நவீன பொருளாதாரத்தினதும், அரசினதும் ஆதிக்கத்தினூடாக அதிகாரமுடைய தேசமொன்றைக் கூட்டாகக் கட்டியெழுப்புவதில் பெரும் சவால்கள் எதிர்நோக்கப்பட்டன. இது சிவில் சமூகம் ஒன்று அரசிற்குள் இருந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அத்துடன் அரசனின் சர்வதிகாரப்போக்கும் பொருளாதார நிலைமைகளும் சிவில் சமூகத்தின் தேவையினை வேண்டி நின்றிருந்தன. பலமான சிவில் சமூகங்கள் மேற்குத் தேச தாராண்மை ஜனநாயக அரசுகளில் காணப்படுகின்றன. ஒன்று கூடுவதற்குள்ள சுதந்திரம், கருத்துக்களை முன்வைப்பதற்குள்ள சுதந்திரம், என்பன சிவில் சமூகங்கள் செயற்படுவதற்கு அவசியமான நிபந்தனைகளாகும். (**Conditions**) ஆயினும், கடந்த இரண்டு தசாப்தங்களிலும், சிவில் சமூகங்கள் சம்மதத்தினடிப்படையிலேயே செயற்பட வேண்டியிருந்தன. ஏனெனில் இடது சாரிகளின் பக்கத்திலிருந்து பலமாக எழுச்சியடைந்த கூட்டுடமைத்தத்துவம் வலதுசாரிகளின் பக்கத்திலிருந்து எழுச்சியடைந்த பொருளாதார கூட்டுறவிற்கும், அபிவிருத்திக்குமான ஒழுங்கமைப்பு போன்றவைகளே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் மேற்குத் தேசங்களில் இருந்து சிவில் சமூகத்திற்கான அச்சுறுத்தலானது எழுச்சியடைந்திருந்தது. இது இனத்துவ அடையாளங்கள், அரசியல் பங்குபற்றுதல்கள், அரசியல் அனுதாபங்கள் (**Political Apathy**) போன்றவற்றை அழிப்பதன் மூலம் உருவாகியது. இதற்கு எதிராக மக்கள் செயற்பட வேண்டியேற்பட்ட போது பெருமளவிலான மக்கள் தொண்டர் நிறுவனங்களில் இணைந்தனர். தமது சமூகத்தின் அரசியல் வாழ்க்கைக்காக காத்திரமான வகிப்பாகத்தினை வகிக்கத் தொடங்கினார்கள். இது சிவில் சமூகம் தொடர்ந்திருப்பதற்கு வாய்ப்பாகியது.

### கருத்து

சமூகக் கோட்பாளர்களாகிய அடம்ஸ்மித், மொண்டெஸ்கியூ, ஹெகல், டிரக்கியூவில் போன்றவர்கள் அரசு சமூகத்துடன் கொண்டிருக்கும் தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு அரசு வகிக்கும் பங்கு தொடர்பாகத் தமது புதிய வியாக்கியானங்களை வழங்கியுள்ளார்கள். இவர்கள் அரசு, சிவில், சமூகம் இரண்டையும் வேறுபடுத்தி ஆய்வு செய்யவில்லை. இதனால் சிவில் சமூகம் என்ற பதம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதி வரை தனியானதொரு விடயப்பரப்பாக எழுச்சியடையவில்லை. மரபு ரீதியாக அரசும், சிவில் சமூகமும் ஒத்த தன்மை கொண்டதாகவே கருதப்பட்டது. பிறட்ரிக் ஹெகல் என்னும் மெய்யியலாளர் 1821 ஆம் ஆண்டு தனது உரிமைகள் என்றும் நூலில் சிவில் சமூகம் என்னும் பதத்தினை அரசு என்பதிலிருந்து பிரித்து பயன்படுத்தியிருந்தார். இந்நூலில் இவர் சிவில் சமூகம், சட்டம், பணிக்குழு, அரசன், யுத்தம் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார். தாராண்மை அரசிற்குள் இயற்கையாக அமைந்திருக்கும் முரண்பாடுகளை வெற்றி கொள்வதும், இணக்கத் தன்மையினைப் புதுப்பித்தலுமே இவருடைய நோக்கமாக இருந்தது. இவருடைய கருத்துப்படி சிவில் சமூகம் என்பது "ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் குழுவாகும. இது குடும்பத்திற்கும் அரசிற்குமிடையிலானதாகும் இயங்கியல் அபிவிருத்தியில் குடும்பத்தில் இருந்து அரசு தோன்றுவதற்கு முன் இது தோன்றியதொன்றாகும்" எனக் கூறுகின்றார். அரசிலிருந்து சிவில் சமூகத்தினைப் பிரித்துக்காட்டும் ஹெகல் அரசிற்கு இராணுவம், கொள்கை, சட்டம், நிர்வாகம் போன்ற பல உறுப்புக்கள் காணப்படுகின்றன எனக் கூறுகின்றார். சிவில் சமூகம் என்பது அரசு ஒன்றிற்குள் அரசியல் ரீதியில் செயற்படக்கூடிய குழுக்கள் அனைத்தையும் சிவில் சமூகம் எனக்கூறிக் கொள்ளலாம். அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசுக்குச் சமமாக அல்லது அதிகமாகச் செயற்படக் கூடிய நிறுவனங்களாக வளர்ந்துள்ளன. ஏர்னெஸ்ற் ஜெல்லர் சிவில் சமூகம் என்பது "பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்களைக் கொண்டதாகும். இவைகள் அரசிற்குச் சமமாகச் செயற்படக்கூடியவைகளாகும். இவைகள் அரசு தனது பங்கினை நிறைவேற்றுவதற்கு தடைகளாக இருப்பவைகளுமல்ல" எனக் கூறுகின்றார்.

## பண்புகள்

சிவில் சமூகம் சந்தைகளை அடிப்படையாகக் கொண்டு கிடையாக ஒழுங்கமைக்கப்படும் நிறுவனங்களாகும். இந்நிறுவனங்கள் அரசிலிருந்து சுதந்திரமாக செயற்படும் பண்பு கொண்டவைகளாகும். சிவில் சமூகம் ஏனைய நிறுவனங்களாகிய அரசியல் கட்சிகள், நலன்பேணும் குழுக்கள், சமய நிறுவனங்கள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், போன்றவற்றிலிருந்து வேறுபட்டதாகும். அரசு படிநிலையாக ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுவதாகும். சிவில் சமூகம் சுதந்திரமான அரசியல், பொருளாதார கலாச்சார அமைப்புக்காளகும். இதன் அங்கத்தவர்கள் சுதந்திரமாக இணைந்து சுதந்திரமாக விலகிச்செல்ல முடியும். அரசியல் சமுதாயம் என்பது அரசு அதனுடன் இணைந்த நிறுவனங்களைக் குறித்து நிற்கின்றது. சிவில் சமூகம் என்பது பல்வேறுபட்ட விருப்பங்கள், தேவைகளில் திருப்தியடைய இருக்கின்றவர்களிற்குப் பொருளாதார வாய்ப்புக்களைத் தேடிக்கொடுப்பதாகும். நவீன காலத்தில் சிவில் என்பது கலாசார எல்லைக்குள் செயற்பாடு மிக்கதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான அமைப்புக்களைக் குறித்து நிற்கின்றது. உதாரணமாக அரசசார்பற்ற நிறுவனங்கள் புலமையாளர்கள், சமயக்குழுக்கள், போன்றவைகளைக் கூறலாம். அரசியற் பொருளாதார செயற்பரப்பு எல்லைக்குள் அரசாங்கத்தினை எதிர்க்காதவைகளாக இவைகள் காணப்படும்.

கிராம்ஸ்கியின் **(Gransci)** சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபட்டதே இப்புதிய எண்ணக்கருவாகும். சிவில் சமூகத்தினை அரசாங்கம் பொருளாதார செயற்பாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டமுடியும். கிராம்ஸ்கி அதிகார மேலாதிக்க கோட்பாடு முதலாளித்துவ அரசுடன் இணைந்ததாகும். இம் முதலாளித்துவ அரசு சம்மதம், பலம் என்பவற்றினூடாக ஆட்சி செய்கின்றது. அரசு என்பதை மிகவும் குறுகிய உணர்வுடைய அரசாங்கத்தினால் விளக்க முடியாது. கிராம்ஸ்கி அரசியல் சமுதாயத்தினையும் (அரசியல் நிறுவனங்கள், சட்ட, அரசியல் யாப்பு ரீதியான கட்டுப்பாடு) சிவில் சமூகத்தினையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார். சிவில் சமுதாயம் பொதுவாக பொருளாதார நலன் சார்ந்த தனியார் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களாகக் கருதப்படுகின்றன. அரசியல் சமுதாயம் பலத்தினால் உருவாகும் இராச்சியம் எனவும் சிவில் சமுதாயம் சம்மதத்திலான ஒன்று எனவும் கிராம்ஸ்கி கூறுகின்றார். நவீன முதலாளித்துவத்தில் பூஷ்வாக்கள் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் முன்வைக்கும் சில கோரிக்கைகளை எதிர்கொண்டு பொருளாதாரம் மீது தமது கட்டுப்பாட்டினை மேற்கொள்கின்றனர். பூஷ்வாக்கள் உடனடியான பொருளாதார நலன்களுடனான அதிகார மாற்றத்திற்கு அனுமதியளித்து செயலாற்ற புரட்சியை அனுமதிக்கின்றார்கள். இன்று ஆயிரக்கணக்கான அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் வலைப்பின்னல்கள், தொண்டர் நிறுவனங்கள் சமூக இயக்கங்கள் காணப்படுகின்றன. சிவில் சமூகங்கள் சிறப்பான வளங்களையும், வல்லுனர்களையும் கொண்டு பூகோளப் பிரச்சனைகளுக்கான அறிவினை வெளிப்படுத்தினாலும் அரச முறைமைக்கு அப்பால் நின்று இவைகள் தமது செயற்பாடுகளைச் செய்கின்றன. இவ்வகையில் சிவிலி சமூகம் பின்வரும் விடயங்களை முதன்மைப்படுத்துகின்றன.

1) அரசியல் சமூதாயத்தினை உருவாக்குகின்றார்கள். மக்களுக்கிடையில் ஒற்றுமை உணர்வினை வளர்க்கிறார்கள்

2) பூகோள மட்டத்தில் சிவில் சமூகங்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. சிறப்பான செயற்பாடுகளுக்கு அரசுகளின்எல்லைகளை இவைகள் கவனத்தில் கொள்வதில்லை.

3) சர்வதேச அரங்கில் அரசு மட்டும்தான் சட்டபூர்வமானது என்பதை சிவில் சமூகங்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

4) சர்வதேச அரச எல்லைகளைக் கடந்து அரசியல் விடயங்களில் சிவில் சமூகங்கள் கவனமெடுக்கின்றன.

5) "பூகோள நகரம்" என்ற தத்துவத்தினடிப்படையிலான நன்னெறி விதிகளை பொதுவாக உயர்த்துபவர்களாக சிவில் சமூகத்தினர் உள்ளனர். அத்துடன் இந் நன்நெறிகளை எல்லா அரசுகளும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சில விமர்சகர்கள், பூகோள சிவில் சமூகம் "பூகோளமயமாதல்" என்பது உருவாவதற்கான கலைஞர்களாக உள்ளது எனக் கூறுகின்றார்கள். எனவே சில சிவில் சமூகம் தனிமனிதர்கள் புதிய வகையில் சிந்திப்பதற்கும், அரசியல் ரீதியாகச் செயற்படுவதற்கும் பாதையமைத்துக் கொடுக்கின்றது எனக் கூறலாம்.